(ஆ) தமிழகத்தில் மருத்துவப் படிப்புகளில் வெளி மாநிலத்தைச் சார்ந்தவர்கள் சேர்க்கை மற்றும் இரட்டை இருப்பிடச் சான்றிதழ் அடிப்படையில் ஒதுக்கீடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள். நீங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. இராமசாமி, நீங்கள் வெளிநடப்பு செய்வது உங்கள் விருப்பம்.*

***முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் முக்கிய இலக்கான சமூக நீதியையும், சமுதாய வளர்ச்சியையும் பாதுகாக்கும் வகையில் (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கரி. இராமசாமி, நீங்கள் உட்காருங்கள்.*

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *1920 ஆம் ஆண்டு நீதிக் கட்சி ஆட்சியில் பனகல் அரசர் மருத்துவக் கல்லூரிக்கு சமஸ்கிருத புலமை தேவையில்லை என்ற சட்டத்தை உருவாக்கிய பிறகு, தொடர்ந்து திராவிடக் கட்சிகள் மருத்துவக் கல்லூரிகளுக்கும், கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள்மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்ல நீங்கள் அனுமதிக்காததால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. அதற்குரிய வாய்ப்பை நான் உங்களுக்கு அளித்தேன். நீங்கள் அந்தக் கருத்தை மறுத்து பதில் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) திரும்பவும் நான் அதை* record *செய்ய விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்ன பேச வேண்டும் என்று விரும்புகின்றீர்களோ; அதனைப் பேசுங்கள். (குறுக்கீடு) எதுவும் பதிவாகாது.*

2019 ஜூலை 10]

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி தொடர்ந்து முக்கியத்துவம் அளித்ததனால், இன்றைக்குத் தமிழ்நாடு, அரசாங்க மருத்துவக் கல்லூரி சீட்டு வாய்ப்புகளில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் முதல், சட்ட அமைச்சர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோர் NEET தேர்விற்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். நாங்களும் அதே கருத்தோடு இருக்கின்றோம். அந்த எதிர்ப்பு மீறி சட்டத்திற்குக் கட்டுப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில், 3 வருடங்களாக NEET mark–ன் அடிப்படையில்தான் அந்தத் தகுதிப் பட்டியல் (merit list) உருவாக்கப்பட்டிருக்கின்றது. 2017–ல் உருவாக்கப்பட்ட அந்தப் பட்டியலில் பலர் இரட்டை இருப்பிடச் சான்றிதழ் (Dual Nativity Certificate) வைத்து, தமிழ்நாட்டிலும், மற்ற மாநிலங்களிலும் இடம் பெற்றார்கள் என்று தெரியவந்து, பலர் அதை நிறுத்துவதற்கான முயற்சிகளை எடுத்தார்கள். நானும் ஒரு பொது நல வழக்கை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்தேன். அந்தப் பிரச்சினையைத் தெளிவாக ஆராய்ந்து, சிலர் இதுபோன்று தவறான அடிப்படையில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பது தெரிய வரும்போது, சில காலமாகிவிட்டது. அதனால் அவர்கள் எதுவும் செய்ய முடியவில்லை. பின்னர் அரசாங்கம் முழுமையாக எல்லோருடைய கருத்தையும் கேட்டு, 2018–ல் ஒரு புதிய அரசாணையைப் பிறப்பித்தது. அதில் இந்தப் பிழைகளைத் திருத்தி, நன்றாக நடைமுறைப்படுத்துவதற்கு 2018–ல் நல்ல ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. இந்த இருப்பிடச் சான்றிதழ்களுக்கு கூடுதல் நிபந்தனைகளோடு வெளியிடப்பட்ட அரசாணை அது. அந்த அடிப்படையில் 2018–ல் வந்த தகுதிப் பட்டியலில் பிரச்சினை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ முடித்துவிடுகின்றேன். இந்த வருடம்

திரும்பவும் அந்தப் பிரச்சினை வந்திருப்பதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் 2019 merit list–லும் இடம் பெற்றிருக்கின்றார்கள் என்ற தகவல் வந்துள்ளது. நேற்று counselling ஆரம்பித்த சூழ்நிலையில், உடனடியாகக் கவனம் செலுத்தி, 2017–ல் நடந்ததுபோன்ற நிகழ்வுகள் திரும்பவும் நடக்கக் கூடாது என்பதற்கு இன்றைக்கு உடனடியாக ஒரு தீர்வையும், நிரந்தரமான ஒரு தீர்வையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு அமைச்சரின் கவனத்தை ஈர்த்து நான் அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நேற்றைக்கு counselling தொடங்கியது; அது தொடங்கியவுடனே வெளி மாநிலத்தைச் சார்ந்தவர்கள் அதில் இடம் பெறுவதற்காக முயற்சிகள் நடப்பதாக தகவல் வருகிறது; அதனை அரசு கண்காணிக்க வேண்டும்; அதற்கு உரிய ஒரு solution வேண்டும்' என்ற ஒரு நல்ல கருத்தைதான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தக் கருத்தில் மிகவும் உறுதியாக, தெளிவாக, திட்டவட்டமாக இருக்கின்றது என்பதை நான் இந்த அவையில் முதலில் பதிய வைக்க விரும்புகின்றேன். இன்றைக்கு இந்தப் பிரச்சினையை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பியதைப் போலவே, கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இந்தப் பிரச்சினை குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்தார்கள்.

முற்பகல் 11–50

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தகவலுக்காக ஒன்றை நான் சொல்கின்றேன். We are talking about the merit seats; அது Government quota. அதுவும் அவர் சொன்னதைப்போல் இந்த ஆண்டு 39,013 applications நமக்கு வந்தன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல பல்வேறு நிலைகளில் scrutiny செய்யப்படுகின்றது. முறையான சான்றிதழ்கள் இருக்கின்றனவா; தேவையான supporting documents–அதாவது, இருப்பிடச்

2019 ஜூலை 10] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

சான்றிதழ், nativity certificate *உள்ளிட்டவை இருக்கின்றனவா என்பதையெல்லாம்—'கண் கொத்திப் பாம்பு' என்று சொல்வார்களே, அதுபோல—கண் கொத்திப் பாம்பாக மருத்துவக் கல்வி இயக்குநரகத்தின்கீழ் உள்ள* Selection Committee *பார்த்துக்கொண்டிருக்கிறது. அப்படிப் பார்த்துத்தான், இந்த முறை* application scrutiny stage*—லேயே 3,616 மாணவர்களை நாங்கள்* ineligible *செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்* scrutiny*—ஐ இன்னும் கடுமையாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். வெளியில்கூட சில அரசியல் தலைவர்கள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால், 'நீங்கள் மாணவர்களிடம் நிறைய* certificates *கேட்கிறீர்கள். மாணவர்களுடைய* School Certificate, Birth Certificate, Community Certificate, Nativity Certificate*—களைக் கேட்டால் பரவாயில்லை; மாணவரின் அப்பாவினுடைய* Birth Certificate, Community Certificate, *மாணவரின் அம்மாவினுடைய* School Certificates *உள்ளிட்டவைகளையெல்லாம் நீங்கள் கேட்கிறீர்களே, இதுவெல்லாம் நியாயமா?' என்று கேட்கிறார்கள். ஒருபுறம் அந்த மாதிரி கேள்விகளும் எழுகின்றன. இன்னொரு புறம், நாம்* scrutiny *செய்யவேண்டிய நிலை இருக்கிறது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த நிலையில்தான் அரசு உறுதியாக இருக்கிறது. மாணவர்கள் சற்று சங்கடப்பட்டாலும் பரவாயில்லை. தமிழ்நாடு போராடிப் பெற்ற M.B.B.S. *இடங்களில் தமிழகத்தைச் சாராத வெளி மாநிலங்களைச் சார்ந்த எந்தவொரு மாணவருக்கும் ஒரு இடம்கூட போகக் கூடாது என்பதில் அரசு மிகவும் உறுதியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் அதில் மிகவும் அதிகமாகவே உறுதியாக இருக்கிறோம். அதனடிப்படையில்தான் இவ்வளவு* scrutiny *செய்கிறோம்;* Eligible applications *31,383 என்று கணக்கிட்டிருக்கிறோம்.*

நேற்றுகூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு list *கொடுத்தார்கள். அந்த* list*—ல் தெரிவித்த 6 பேரில் கூட, நேற்று நடந்த* counselling*—ல் 2 பேரை* ineligible *செய்திருக்கிறோம்; 2 பேர்* absent; *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த* list*—ல் 2 பேர்* genuine. *இதனைக் கண்காணிக்க தனியாக ஒரு* Expert Committee *அமைத்திருக்கிறோம். அந்த* Committee *அமைக்கப்பட்டு, அதில் மிகவும்* strict *ஆக, ஒன்று; மாணவருடைய பிறப்புச் சான்றிதழ், இரண்டு; மாணவர் மற்றும் அவருடைய பெற்றோர்கள் தமிழ்நாட்டில் கல்வி பயின்றதற்கான*

சான்றிதழ், மூன்று; பெற்றோர்களுடைய சாதிச் சான்றிதழ், நான்கு; மாணவருடைய சாதிச் சான்றிதழ், ஐந்தாவதாக, குடும்ப அட்டை உள்ளிட்ட அனைத்தையும் நாம் வாங்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, ஒரு நல்ல idea. Affidavit, self–declaration நாங்கள் கேட்கிறோம். நாங்கள் எந்தச் சூழ்நிலையிலும், 'அரசிடம் நாங்கள் கொடுக்கின்ற certificates தவறாக, அதாவது, bogus எனக் கண்டுபிடிக்கப்பட்டால், அரசு எங்களை எந்த நேரத்தில் வேண்டுமானாலும், terminate செய்யலாம்' என்பதற்கான ஒரு Self–Affidavit Form–ல் நாம் கையெழுத்து வாங்குகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நல்ல வழிமுறைகளைச் சொன்னார்கள். அந்தந்த மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கு முன்பாக 100/– ரூபாய் பத்திரத்தில், self–declaration கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். 'அந்த self–declaration தவறு எனக் கண்டுபிடிக்கப்பட்டால், police action அவர்கள்மீது வரும்' என்றும் சொல்லியிருக்கிறோம். 'Criminal Proceedings initiate செய்யப்படும்; அது prosecution வரைக்கும் போகும்' என்று சொல்லியிருக்கிறோம். இவையனைத்தையும் detailed ஆக, மாண்புமிகு உறுப்பினர்களின் தகவலுக்காகச் சொல்கிறேன்.

கடந்த முறை இதுமாதிரியான குற்றச்சாட்டு எழுந்தவுடனேயே Prospectus–ல் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். "If false Nativity Certificate is submitted and at a later date if it is found out, the candidate will be expelled from the course and also criminal proceedings will be initiated against the candidate as well as his/her parents as per the provisions of the law" என்று அந்த விதிமுறைகளில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். அதனால் வெளி மாநிலத்தைச் சார்ந்த யாரும் ஒரு தவறான Dual Nativity Certificate–ஐக் கொடுத்திருந்தால் அந்த மாணவர்கள் dual nativity certificate இரண்டு இடங்களில் வாங்கி சமர்ப்பித்திருந்தால் அவர்கள் disqualified ஆகிவிடுவார்கள். அதில் எந்த மாற்றமும் இல்லை. அதில் அரசு மிகத் தெளிவாக இருக்கிறது; மிக உறுதியாக இருக்கிறது; மிகவும் திட்டவட்டமாக இருக்கிறது. இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனைகளையும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். மாணவர்களிடம் Self–Affidavit வாங்குகிறோம். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. தமிழகத்தில் நாம் கேட்டுப் பெற்றிருக்கக்கூடிய M.B.B.S. seats–ன் மொத்த ஒதுக்கீடு அதிகளவில் இருக்கிறது. ஏன் இந்தப் பிரச்சினை

வருகிறதென்றால், இந்தியாவிலேயே அதிகமாக M.B.B.S. seats நம்முடைய மாநிலத்தில்தான் இருக்கின்றன. கிட்டத்தட்ட State quota மட்டும் 3,968 இடங்கள் இருக்கின்றன. இந்த 3,968 இடங்களும் தமிழகத்தைச் சார்ந்த, தமிழகத்தில் இருப்பிடச் சான்றிதழ்களை முறையாகக் கொடுக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு மட்டுமே வழங்கப்படும் என்ற நிலைப்பாட்டை அரசு உறுதிபட ஏற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

(அ) தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு, ‘கஜா’ புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சேதமடைந்த சாலைகள் மற்றும் பாலங்களை மறுசீரமைத்தல், ஊரகப் பகுதிகளில் சமுதாய உறிஞ்சுக் குழிகள் அமைத்தல், கிராமப்புறங்களில் தண்ணீரைச் சேமித்திட தடுப்பணைகள் கட்டுதல், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு, சேலத்தில் செயல்படும் தமிழ்நாடு கிராம வங்கிக்கு வளாகம் அமைத்திட நிலம் ஒதுக்கீடு உள்ளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த சில அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

1. மாண்புமிகு அம்மா அவர்கள் 2015–2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தினை 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் இதற்கான நிதி ஒதுக்கீடு கடந்த 2018–2019 ஆம் ஆண்டில் 1,200 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டிலும், 1,200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன்மூலம், 5,000 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)